தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 18-2-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலை நாட்டு நலப் பணித்திட்டம் சார்பில் டெங்கு விழிப்புணர்வு**

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவும் செய்தி அவ்வப்போது எழுந்த வண்ணம் உள்ளது. காய்ச்சல் பரவுவதை தடுக்கும் முன்னேற்பாடாக கோவை மாநகராட்சி சார்பில் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் மருந்தடித்தல், வீட்டுக்கு வீடு விழிப்புணர்வு போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் அரசின் சீரிய முயற்சியில் இணைந்து வளாக அருகாமையில் உள்ள சேரிப் பகுதிகளில் 17-2-2015 அன்று விழிப்புணர்வு நிகழ்த்தினர். முதலாமாண்டு வேளாண்மை பயிலும் 40 நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் மாநகராட்சி ஊழியர்களுடன் இணைந்து துண்டு பிரசரங்கள் வினியோகித்து டெங்கு வைரஸ் பரவும் முறை குறித்து மக்களிடம் கூறினர். தேக்கி வைக்கப்பட்ட குடிநீரில் புழுக்கள் இருப்பதை பார்வையிட்டு அவை அகற்றப்பட்டு மருந்தடிக்கப்பட்டது. டெங்கு காய்ச்சல் ஏற்படுத்தும் கொசு பரவுவதற்கு ஏதுவாக உள்ள பழைய டயர், தேங்காய் தொட்டி, ஆட்டுக்கல் ஆகியவற்றை அப்புரப்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

வட்டார மருத்துவ அலுவலர் திருமதி ராதிகா நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சி ஏற்பாட்டை மாநகராட்சி வார்டு 21 சுகாதார ஆய்வாளர் திரு. கே.வி. திருமால், வேளாண் பல்கலை நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் முனைவர். மு.ரா. லதா மற்றும் பல்கலை சுகாதார அலுவலர் திரு .ம. மருதாச்சலம் ஆகியோர் மேற்கொண்டனர். வார்டு கவுன்சிலர் திரு. செந்தில் நிகழ்ச்சியில் பங்கு பெற்றார்.

மக்கள் தொடர்பு அலுவலர்